**பொரலெஸ்கமுவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 21 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, பொரலெஸ்கமுவ நகர சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாய பூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

(அ) 2013, 2014 ஆம் ஆண்டுகளின் பொருட்டு 2016 ஆம் ஆண்டின்போது மாகாண வருவாய்த் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட முத்திரை வருவாய் முறையே ரூபா 2,100,625 மற்றும் ரூபா 25,608,073 என்பனவாகும். இவற்றை மீளாய்வாண்டினது வருவாயாகக் கருதி ஏனைய வருவாயின் கீழ் கணக்கிலிட்டமையால் ஏனைய வருமானம் ரூபா 27,708,698 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) களஞ்சியப் பேரேட்டுக் கணக்கில் உள்ளடங்கிய 16 மின்சார பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள், பதிவேடுகள், படிவங்கள் என்பவற்றின் பெறுமதியான ரூபா 147,186 இறுதிக் கணக்குகளில் காட்டப்படவில்லை.

(இ) களஞ்சியப் பேரேட்டில் உள்ளடங்கிய 21 கையிருப்புப் பொருட்களது பெறுமதி ரூபா 209,502 அதிகரித்தும் 11 கையிருப்புப் பொருட்களது பெறுமதி ரூபா 116,246 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 02 கணக்கீட்டு விடயங்களது மீதிகளை அவற்றுடனொத்த உப பதிவேடுகளதும் அறிக்கைகளினதும் மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,645,000 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புகளது கொடுப்பனவு ரூபா 5,464,148 ஆகும். எனினும், வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் ஆண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 5,436,573 ஆகையால் ரூபா 27,575 வேறுபாடு நிலவியது.

### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

(அ) வருவாய் கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்படவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டண வருவாய் மீதி ரூபா 56,700 ஆகும். இது 2011 தொடக்கம் மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தது.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் மீதி நிலுவை ரூபா 10,737,028 ஆகும். இதில் 11 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 341,579 தற்போது அறவிடப்படாதிருப்பதுடன், அதில் 06 ஊழியர்களிடமிருந்து 2 முதல் 7 ஆண்டுகளாக அறவிடப்படாதிருந்த தொகை ரூபா 200,034 ஆகும். இதனை அறவிடுவதற்குச் சபை தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) 2015 ஆம் ஆண்டின்போது கையிருப்புப் பேரேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் ஆரம்பக் கையிருப்பு மீதியை அதற்கு முன்னைய ஆண்டின் இறுதி மீதியுடன் ஒப்பிட்டு அதனைப் பிழையற்றது என உறுதிசெய்வதற்குத் தேவையான சான்றுகள் சபையிடம் இருக்கவில்லை.

(ஆ) ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காணப்பட்ட நானாவித வைப்புகளது பெறுமதி ரூபா 5,804,771 ஆகும். இதனை உறுதி செய்வதற்குத் தேவையான பட்டோலை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள், இழப்புகள் தொடர்பான பதிவேடு பேணப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 104(2) மற்றும் 1642 | 2016 ஆம் ஆண்டின் போதிலான 02 வாகன விபத்துக்கள் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை வழங்கப்படாததுடன், பொலிசுக்கும் அறிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 104(3) (4) | 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கையும் பூரண அறிக்கையும் தயாரிக்கப்படவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய 05 வகை வைப்புகளது பெறுமதி ரூபா 2,194,105 ஆகும். இதனை அரச வருவாயில் செலவு வைத்திருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 751 மற்றும் மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளது கணக்கீட்டுப் பிரமாணத்தின் களஞ்சியப் பொருட்கள் சம்பந்தமான கணக்கீட்டு அறிவுறுத்துரைகள் | சபைக்குரிய களஞ்சியப் பொருட்களுக்கு கையிருப்புப் பதிவேடு பேணப்படவில்லை |
| (vi) | நிதிப்பிரமாணம் 751(4) | கையிருப்புப் பேரேடு தொடரிலக்கப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குரிய 10 வாகனங்களது ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (viii) | நிதிப்பிரமாணம் 1653 | சபைக்குரிய 09 வாகனங்களது தூர மானிகள் நெடுங்காலமாகச் செயற்படாதிருந்தன. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

---------------------------------------------------

| | |
|---|---|
| தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தினது 3.5 ஆம் பிரிவும் 3.17.2 ஆம் பிரிவும் | கடனாளிகளினதும் பிணையாளியிகளினதும் கடன் வரம்பு 40 சதவீதத்திற்கு மேற்பட்டிருந்த போதும், கடனை வழங்குகையில் அது கருத்தில் கொள்ளப்படவில்லை. |

(இ) சுற்றறிக்கைகள்

---------------------------

| | |
|---|---|
| 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சபைக்குரிய 28 வாகனங்கள் சம்பந்தமாக எரிபொருள் நுகர்வுப் பரிசீலனை 06 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | மாநகர சபைகள், நகர சபைகள் என்பவற்றிற்கான கணக்கீட்டுக் கோவை | நிலையான சொத்துக்கள் ரூபா 107,045,954 ஆகும். இதன் பொருட்டு நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 28,029,078 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 20,627,381 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 7,401,697 அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

சபையின் செயலாளரால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | 2016 | | | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | உள்ளவாறு அறவிட வேண்டியது | உள்ளவாறு அறிடப்பட்டது | ஆண்டிற்கான நிலுவை | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| தீர்வையுத் வரியும் | 27,807 | 19,623 | 8,184 | 17,350 | 25,261 | 22,486 |
| குத்தகை வாடகை | 1,571 | 1,204 | 367 | 287 | 1,528 | 375 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 401 | 338 | 63 | 63 | 336 | 57 |
| ஏனைய வருவாய் | 42,585 | 41,249 | 1,336 | 1,336 | 42,106 | 30,279 |

#### 2.2.2 தீர்வையும் வரியும்

(அ) தீர்வை வரி அறவீட்டிற்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சொத்துக்களை மதிப்பீடு செய்ய வேண்டுமாயினும், பொரலெஸ்கமுவ நகர சபை 2009 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்களை மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கெனப் பட்டியலிடப்பட்ட வருடாந்த தீர்வை வரி வருவாய் ரூபா 24,616,014 ஆகும். அதில் ரூபா 16,431,554 மாத்திரம் ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. அது பட்டியலிடப்பட்ட வருவாயில் 66.7 சதவீதம மாத்திரமே ஆகும். மொத்த வருவாயில் 33.3 சதவீதமான ரூபா 8,184,460 ஆண்டின்போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தீர்வைவரி மீதி ரூபா 22,429,283 ஆகும். அதில் 72 சதவீதமான ரூபா 16,138,163 ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை வரி நிலுவை மீதி ரூபா 17,349,832 ஆகும். அதில் ரூபா 847,447 பதினொரு கூறுகளது ரூபா 50,000 க்கு மேற்பட்ட தீர்வை வரியை உள்ளடக்கியனவாகும். மொத்த நிலுவை மீதியில் ரூபா 12,840,462 தொகையானது 2017 மார்ச் 17 ஆந் திகதியளவிலும் நிலுவையாக இருந்தது.

### 2.2.3 குத்தகை வாடகை

மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது விற்பனைத் தொகுதிக் கடைகளிலிருந்து ரூபா 166,706 மற்றும் புதிய விற்பனைத் தொகுதிக் கடைகளிலிருந்து ரூபா 122,436 என்பன அறவிடப்பட வேண்டியிருந்தன. 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு இந்நிலுவைகள் முறையே ரூபா 103,780 மற்றும் ரூபா 46,424 என்பனவாகும்.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டிற்கென ரூபா 25,000,000 முத்திரை வருவாயாக மதிப்பீடு செய்யப்பட்டு ‘‘ஏனைய வருவாய்’’ எனும் விடயத்தின் கீழ் வருமான, செலவினக் கணக்கிலிட்ட போதும், ஆண்டிற்கான முத்திரை வரி எதுவுமே அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) பொரலெஸ்கமுவ நகர சபை கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையுடன் 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி புதிய உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன், 2016 சனவரி 01 முதல் 2016 யூலை 31 வரையான காலப்பகுதிக்கான உடன்படிக்கையை கணக்காய்விற்கச் சமர்ப்பித்திருக்கவில்லை. 2016 சனவரி முதல் யூலை வரை கலவையாகக் காணப்படும் கழிவுப் பொருட்களுக்கு நானாவித வீதப்படி கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது. மார்ச் முதல் யூலை வரையிலான காலப்பகுதிக்கு சனவரி, பெப்ரவரி மாதக் கொடுப்பனவு வீதத்தைப் பயன்படுத்தாது புதிய உடன்படிக்கை வீதப்படி கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. அதற்கமைய, கலவையாகக் காணப்படும் கழிவுப்பொருட்களின் பொருட்டு ரூபா 3,450,855 அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேல் மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறுவர் பாடசாலை ஒன்றை நடாத்துவதற்காக சபையால் ரூபா 1,775,401 செலவழிக்கப்பட்டு வேரஹெர கனிஷ்ட வித்தியாலயக் கட்டிடம் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அக்கட்டிடத்தின் ஒரு பகுதியை கனிஷ்ட வித்தியாலயம் தனதாக்கியிருந்தது. இச் செயற்திட்டம் தொடர்பாகத் தொடர்படையவர்களுடன் உடன்படிக்கையில் ஈடுபடுவதற்குச் சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே வரும் முற்கொடுப்பனவு மீதியாகிய ரூபா 188,905 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அம்மீதியை உறுதி செய்வதற்கான சான்றும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் நெடுங்காலமாகச் செயலற்றவாறிருந்தன. அவற்றை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(இ) பல்வேறு காரணங்களின் நிமித்தம் அறவிடப்படாதிருந்த ரூபா 219,327 பெறுமதியான ஊழியர் கடனை பிணையாளிகளிடமிருந்து அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் திருப்பி அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டின்போது சம்பளமாக ரூபா 55,765,767 வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 360,483 உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட முடியாததாக இருந்தது.

(உ) 2016 சனவரி 01 முதல் பெற வேண்டிய கணக்குகளின் கீழ் காட்டப்பட்ட அங்கத்தவர் படி மற்றும் பெற வேண்டிய சம்பளம் என்பன முறையே ரூபா 298,500 மற்றும் ரூபா 5,966,866 என்பனவாகும். இவற்றிற்கான மீளளிப்பை பெறாது இவை பதிவழிக்கப்பட்டிருந்தன.

(ஊ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் 08 நிறுவனங்களால் பொருத்தப்பட்டிருந்த 08 அறிவித்தல் பலகைகளுக்கு 2016 யூலை வரை அறவிடப்பட வேண்டிய கட்டணங்களாகிய ரூபா 87,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

மீளாய்வாண்டின்போது சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் செயற்பட்டவாறிருந்த உடன்படிக்கைகளுக்குள்ளான அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 82 ஆகும். இவற்றுள் 02 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டும் 08 செயற்திட்டங்கள் முடிவடையாதும் இருந்தன.

**3.4 பதவியணி நிர்வாகம்**

ஒன்பது சுகாதாரத் தொழிலாளர்கள் சாரதிகளாகப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

(அ) ஆண்டின்போது வருவாய் மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதியேற்பாடு மாற்றஞ் செய்யப்பட்டதையடுத்து பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினங்களுக்கிடையே 4.08 முதல் 100 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவிய 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையால் மதிப்பீடு செய்யப்பட்ட 25 செலவின விடயங்களுக்கான ரூபா 19,135,000 மீளாய்வாண்டின்போது முற்றாகச் சேமிப்புக்குள்ளானது.

(இ) 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம், பௌதீக திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணி மற்றும் கட்டிடங்களுக்கான செயற்திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில்

குழுக்களுக்கான படி எனும் செலவின விடயத்தை தவிர ஏனைய செலவின விடயங்களது ரூபா 3,194,900 கூட்டுத் தொகையானது முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் பிரகாரம் 14 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 16 முதல் 96 சதவீதம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 133(1) மற்றும் (2) ஆம் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் உள்ளக்க கணக்காய்வுப் பிரிவினது நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணங்கள் 134 (1), (2), (3) என்பவற்றின் பிரகாரம்,

(i) நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாகம் என்பவற்றிலிருந்து நீங்கி சுதந்திரமாக இயங்கக் கூடிய கூறாக அமைதல்.

(ii) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்துடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்

(iii) உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல்.

போன்ற விடயங்கள் சம்பந்தமாக குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்படுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு